# செய்திக்குறிப்பு - 15வது தேசிய விலங்குரிமை தினம், சென்னை

Our Planet. Theirs Too.

ஜூன் 8, 2025

இந்த செய்திக்குறிப்பு ஆங்கிலத்திலும் கிடைக்கும்.

**நேரம்:** ஜூன் 8, ஞாயிறு, 3 PM - 5 PM

**இடம்:** நாராயணப்பா சாலை, கலெக்டர் ஆபிஸ் அருகில், பீச் ரோடு, ஜார்ஜ் டவுன், சென்னை, தமிழ்நாடு, 600001

*Our Planet. Theirs Too.* (நம் உலகம், அவர்களுக்கும் சொந்தம்) என்னும் நிறுவனம் பதினைந்தாவது தேசிய விலங்குரிமை தினத்தை ஞாயிறு, ஜூன் எட்டாம் தேதி, பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணி வரை கலெக்டர் ஆபீஸ் அருகில் நடத்தவிருக்கிறது. தேசிய விலங்குரிமை தினம் என்னும் நிகழ்வு உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்தபட்டு வருகிறது. இந்நாள் மனிதர்களால் தினந்தோறும் சுரண்டப்படும் மற்றும் ஒடுக்கப்படும் விலங்குகளின் நினைவு நாள் ஆகும்.

தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களிலிருந்தும், மற்ற மாநிலங்களிலிருந்தும் சுமார் 70 விலங்கு விடுதலை களப்பணியாளர்கள், இந்த நினைவு தினத்திற்கு சென்னையில் ஒன்றுகூட உள்ளார்கள். அத்துடன் மனிதர்களின் தலைமையிலான ஒடுக்குமுறையிலிருந்து விலங்குகள் சுதந்திரமாகவும் விடுதலையாகவும் இருக்க வேண்டும் என மக்கள் குரல் கொடுக்க ஊக்குவிக்கின்றனர்.

விலங்கு உரிமையை மதிப்பது என்பது ஒருவரின் வாழ்க்கை முறையோ அல்லது உணவு பழக்கத்தைப் பற்றியோ கிடையாது. அது விலங்குகளை நேசிப்பதையோ கொல்லாமல் இருப்பதைப் பற்றியோ கிடையாது. அது மனிதர்களின் நலன் , கர்மா அல்லது இறக்க குணம் பற்றியதும் அல்ல. விலங்கு விடுதலை என்பது, 'விலங்குகளை அடக்குமுறை செய்வது சரி' என்ற கருத்தை அகற்றுவதும், விலங்கினவாதம் எனப்படும் அநீதியை ஒழிப்பது மட்டுமே ஆகும். விலங்கினவாதம் என்பது ஒரு விலங்கின் இனத்தை வைத்து பிரிவினை செய்வதாகும் , முக்கியமாக மனிதர்கள் மற்ற விலங்குகளை விட மேலானவர்கள் என்பதாகும். விலங்கு விடுதலை களப்பணியாள மக்களிடம் இந்த பிரிவினைவாதத்தை முறியடித்து விலங்குகளை அடக்குமுறை செய்வதில் பங்கேற்காமல் இருக்குமாறு கேட்டககொள்கிறார்கள்.

இந்த நிகழ்விற்காக, களப்பணியாளர்கள் NARD பதாகையைத் திறந்து வைப்பார்கள், மேலும் பெரும்பாலும் வசதியாக மறக்கப்படும் விலங்குகளுக்கு அஞ்சலி செலுத்த மெழுகுவர்த்திகள் மற்றும் ஊதுபத்திகளை எற்றிவைப் NARD பதாகையுடன், களப்பணியாளர்கள் விலங்கு உரிமைகள் பிரகடனத்தைத் திறந்து கையொப்பமிடுவார்கள், அதே நேரத்தில் விலங்குகளுக்கு மலர்களை வழங்குவார்கள். அதைத் தொடர்ந்து, ஆர்வலர்கள் விலங்குகளின் விடுதலைக்கான போராட்டம் குறித்த பாடல்களைப் பாடுவார்கள், கவிதைகள் மற்றும் உரைகளைச் சொல்வார்கள்.

சென்னையில் உள்ளக் களப்பணியாளர்கள் 2022 முதல் NARD-ஐ நடத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு, ஆர்வலர்கள் சில இறந்த விலங்குகளைக் கொண்டு வந்தனர், அவற்றுக்கு துக்கம் அனுசரிக்கப்பட்டு, பின்னர் உரிய மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டன; ஆனால் இந்த ஆண்டு சென்னை காவல்துறை அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

NARD என்பது ஒரு உலகளாவிய நிகழ்வாகும். இது முதன்முதலில் 2011 இல் நியூயார்க் நகரில் தொடங்கியது. அதன் பின்னர், பல நாடுகள் மற்றும் கண்டங்களில் உள்ள அதிகமான நகரங்கள் அதன் அனுசரிப்பைத் தொடர்ந்தன 2025 ஆம் ஆண்டில், 41 நாடுகளில் உள்ள 172 நகரங்கள் NARD-ஐ நடத்துகின்றனர். இதில் இந்தியா முழுவதும் 20 மாநிலங்களில் உள்ள 53 நகரங்கள் அடங்கும்.

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: சமரன் தாமரை (+91 733-878-2489), Humane Education Officer, BCI.
thenard.org, ourplanettheirstoo.org